பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 06 2024        7 15

செவ்வாய்கிழமை        காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி காலை எட்டு மணிக்கு தொடங்குகிறது,
- வாக்கு எண்ணிக்கை முன்னணி நிலவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.
- ஆந்திரா, ஒடிஸா சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படுகின்றன.
- அஸ்ஸாம் மற்றும் மணிப்பூரில் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்பப்பெருக்கால் இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.
- இந்தோனேஷியா ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

வாக்கு எண்ணிக்கை காலை எட்டு மணிக்கு தொடங்குகிறது.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படுகின்றன.

இதையடுத்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும்.

தேர்தல் முன்னணி நிலவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

பிற்பகலுக்குள் முன்னணி நிலவரங்கள் தெரியவரும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகளை **results.eci.gov.in** என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வோட்டர் ஹெல்ப்லைன் செயலி மூலமாகவும் வாக்கு எண்ணிக்கை நிலவரத்தை அறிந்து கொள்ளலாம்.

நாடு முழுவதும் வாக்கு எண்ணிக்கைக்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணிக்கை நடைமுறை முழுமையாக வீடியோ கேமரா மூலம் கண்காணிக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எந்தவொரு சிறு தவறும் ஏற்படாவண்ணம் வாக்கு எண்ணிக்கை நடைபெறுதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணிக்கையை நுண்பார்வையாளர்கள் கண்காணிக்க உள்ளதாகவும் திரு ராஜீவ்குமார் கூறியுள்ளார்.

ஆந்திரா, ஒடிசா சட்டப் பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படுகின்றன.

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டடம் விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி உட்பட நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 26 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படுகின்றன.,

**[]<<<>>>[]**

பீகாரில் உள்ள 40 மக்களவைத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 33 மாவட்டங்களில் உள்ள 40 மையங்களில் நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்க 80 தேர்தல் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அம்.மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு ஹெச் ஆர் ஸ்ரீநிவாஸ் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில வாக்கு எண்ணும் மையங்களைச் சுற்றி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ராஜஸ்தானில் வாக்கு எண்ணிக்கை மையங்களில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு பிரவீன் குப்தா தெரிவித்தார்.

மாநிலத்தில் வாக்கு எண்ணும் பணிக்கு 56 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

கேரளாவில் வாக்கு எண்ணிக்கை வெளிப்படைத் தன்மையுடனும், அமைதியாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு சஞ்சய் கவுல் தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர்கள், வாக்கு எண்ணும் பணியாளர்கள், நுண் பார்வையாளர்கள், தேர்தல் ஆணைய பிரதிநிதிகள், தேர்தல் பணியில் உள்ள அரசு அதிகாரிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் தேர்தல் முகவர்கள் ஆகியோர் மட்டுமே வாக்கு எண்ணும் அறைக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

உத்தரப் பிரதேசத்தில் 80 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 81 மையங்களில் நடைபெறவுள்ளதாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நவ்தீப் ரின்வா தெரிவித்துள்ளார்.

வாக்கு எண்ணிக்கையை ஒட்டி மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது தவிர மத்திய ஆயுதப் படைகளின் 145 கம்பெனிகளும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

[]<<<>>>[]

மணிப்பூரில் இரண்டு மக்களவைத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கைக்கு 24 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அசம்பாவிதங்களைத் தவிர்க்க கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

ஆந்திராவில் மொத்தமுள்ள 25 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 175 சட்டப்பேரவை தொகுதிகளில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்படுகின்றன.

மாநிலம் முழுவதும் 33 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

வாக்குப்பதிவின் போதும் அதற்குப் பிறகும் வன்முறை சம்பவங்கள் நடைபெற்ற பல்நாடு, சித்தூர், அன்னமய்யா மாவட்டங்களில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

ஒடிசாவில் உள்ள 21 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 147 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கைக்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய ஆயுதப் படைகளின் 70 கம்பெனிகள் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே ஒடிசா சட்டப்பேரவை நேற்று கலைக்கப்பட்டது. முதலமைச்சர் திரு நவீன் பட்நாயக் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பரிந்துரையை ஏற்று அம்மாநில ஆளுநர் திரு ரகுபர் தாஸ் சட்டப்பேரவையைக் கலைத்துள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் 39 மையங்களில் இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்ய பிரதா சாஹு தெரிவித்துள்ளார்.

தேர்தல் முன்னணி நிலவரங்களை உடனுக்குள் அறிந்து கொள்ள சிறப்பு ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

தமிழகத்தில் வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணிகைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

( வாய்ஸ்பைட் - ரகுராஜா/தூத்து / விருதுநகர் )

-120 செகண்ட்

[]<<<>>>[]

நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்த குடிமைப் பணி அதிகாரிகள் திறம்பட பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் 2022-ம் ஆண்டு பிரிவு உதவிச் செயலாளர் நிலையிலான அதிகாரிகளிடையே பேசிய அவர், எப்போதும் நாட்டின் நலனை முதன்மையாகக் கொண்டு, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த அதிகாரிகள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விரைவான வளர்ச்சிக்கான வழிகாட்டிகளாக குடிமைப் பணி அதிகாரிகள் திகழ்வதாக திரு ஜக்தீப் தன்கர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தில்லியில் தண்ணீர் தட்டுப்பாடு தொடர்பாக தில்லி, ஹரியானா மற்றும் இமாச்சல பிரதேச மாநிலங்கள் பங்கேற்கும் யமுனை நதி வாரியத்தின் அவசர கூட்டத்தை நடத்துமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தில்லி அரசு தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள திரு பி கே மிஸ்ரா, திரு கே வி விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய விடுமுறைக்கால அமர்வு, நாளை இந்தக் கூட்டத்தை நடத்த உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தது.

கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது,

[]<<<>>>[]

தென்மேற்கு பருவமழை ஆந்திரா, கர்நாடகா மற்றும் தெலங்கானாவின் பல பகுதிகளில் தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த நான்கு முதல் ஐந்து நாட்களுக்குள் நாட்டின் பிற பகுதிகளுக்கும் தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கான சூழல் நிலவுவதாகவும் அது கூறியுள்ளது,

இதனிடையே அஸ்ஸாம் மற்றும் மணிப்பூரில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

அசாமில் 10 மாவட்டங்களில் தொடர்ந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் 191 நிவாரண முகாம்களை மாநில அரசு திறந்துள்ளது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாநில மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

577 கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 6,000 ஹெக்டேரில் பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மணிப்பூரில் கனமழை காரணமாக பல இடங்களில் வெள்ளப்பெருக்கு நீடிக்கிறது.

மாநிலத்தில் கல்வி நிறுவனங்களுக்கு இன்றும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இந்தோனேஷியா ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா சார்பில் லக்ஷயா சென், எச் எஸ் ப்ரணாய், கிடாம்பி ஸ்ரீகாந்த், பிரியான்ஷு ரஜாவத், பி வி சிந்து, த்ரிஷா ஜோலி, காயத்ரி கோபிசந்த் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**